|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை உத்தரவு கிடைக்கப்பெறவில்லை.<br>எனவே மேற்படி இரண்டு பணியிடஙகளையும் 01.10.2009 முதல் 30.09.2016 வரை தொடர்ந்து நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், மற்றும் 01.10.2016 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்வதற்கும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப அங்கீகாரத்திற்காக | |
| | <u>பொருள் எண்: 36</u><br>குழாய் ஆய்வாளர் பணியிடம்–1, குடிநீர் குழாய் பொருத்துனர் பணியிடம்–1, குழாய் திறப்பாளர் பணியிடம்–2 ஆக மொத்தம் நான்கு பணியிடஙகளை சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை மூ.மு.எண்.78575/99/எப்–3 நாள்: 12.04.2000 உத்திரவில் மேற்படி பணியிடஙகள் குடிநீர் பராமரிப்பு பணிக்கான நியமன நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக தோற்றுவிக்க ஆணை வழஙகப்பட்டுள்ளது.<br>மேற்படி தற்காலிக பணியிடஙகள் பணி நியமனம் செய்யப்பட்ட தேதி முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதியளிக்குமாறு நகர்மன்ற தீர்மான எண்.1016 நாள்.28.08.2009–ல் ஒப்புதல் பெற்று பிரேரணை சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உத்திரவு இன்னும் கிடைக்கப்பெறவில்லை.<br>எனவே மேற்படி தற்காலிக பணியிடஙகள் பணி நியமனம் செய்யப்பட்ட தேதி 28.03.2006 முதல் 30.09.2016 வரை வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2016 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதியளிக்குமாறு, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப அங்கீகாரத்திற்காக<br><u>அ. கு:-</u><br>கோவில்பட்டி நகராட்சி தற்போது அரசாணை எண்.237, நாள்.02.12.2008 முதல் சிறப்பு நிலையாக செயல்பட்டு வருகிறது. 40கி.மீ. தூரத்திலிருந்து சீவலப்பேரி கிராமத்திலிருந்து குழாய் மூலம் குடிநீர் இந்நகராட்சி எல்லைக்குள் கொண்டு வரப்பெற்று நகரிலுள்ள 7 மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் நிரப்பப்பட்டு நகரிலுள்ள சுமார் 18524ற்கும் மேல் உள்ள குடிநீர் இணைப்புகள் மூலம் மக்களுக்கு தஙகுதடையின்றி குடிநீர் வினியோகம் செய்யும் பணிக்கு கீழ்கண்ட பணியிடஙகள் மிகவும் அவசியமாக உள்ளது.<br>1) குழாய் ஆய்வாளர் .. 1<br>2) குடிநீர் குழாய் பொருத்துனர் .. 1<br>3) குழாய் திறப்பாளர் – 2<br>எனவே மேற்படி புதிதாக ஒரு வருடகாலம் தோற்றுவித்து அனுமதித்த பணியிடஙகளை நிரப்பும் தேதி 28.03.2006 முதல் 30.09.2016 வரை நீட்டித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2016 முதல் நிரந்தரமாக | **2640.** அங்கீகரிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | வைத்துக் கொள்ள அனுமதி வழஙகக்கோரி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப அஙகீகாரத்திற்காக. | |
| | **<u>பொருள் எண்: 37</u>**<br>கோவில்பட்டி சிறப்புநிலை நகராட்சியானது வார்டு எண்.17 புதியசாலையில் அமைந்துள்ளது. மேற்சொன்ன அலுவலக கட்டிடம் நெடுஞ்சாலை துறையால் பராமரிக்கப்படும் சாலையின் ஓரத்தில் அமைந்துள்ளது.<br>இவ்வலுவலகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இருபாலர்களும் பணி செய்கிறார்கள். இவர்களில் பெண் பணியாளர்கள் அதிகளவில் பணி செய்கிறார்கள். அலுவலகம் சாலையோரத்தில் அமைந்திருப்பதால் அலுவலக நேரம் அல்லாமல் பிற நேரஙகளிலும் அலுவலர்கள் அல்லாதோர் தஙகளது வாகனஙகளை அலுவலக வளாகத்திற்குள் நிறுத்திவிட்டு தஙகளது பணிகளுக்காக வெளியூர்களுக்கு சென்றுவிடுகிறார்கள். அதேபோல் அலுவலக பணிகளுக்காக அல்லாமல் இதர பொதுமக்களும் அலுவலகத்திற்குள்ளே எந்தவித அனுமதியும் இல்லாமல் பிரவேசிப்பதும் வளாகத்திற்குள்ளேயே நேரத்தை செலவழிப்பதும் வாடிக்கையாக உள்ளது.<br>மேலும் அலுவலகத்தில் குடிநீர் விநியோகம் உள்ளிட்ட இதர கோரிக்கைகளுக்காக எந்தவித முன்அனுமதியும் இல்லாமல் ஒருசிலர் பொதுமக்களோடு அடிக்கடி அலுவலகத்திற்குள் வந்து பணியாளர்கள் மற்றும் அலுவலர்களை கோரிக்கைகள் என்ற பெயரில் பணி செய்ய விடாமல் தடுக்கின்ற சூழலும் இருந்து வருகிறது.<br>மேலும் விரைவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல் நடைபெற உள்ளதால் தேர்தல் குறித்த நடவடிக்கைகளை கண்காணித்து பதிவு செய்வதும் அவசியமாக உள்ளது. எனவே அலுவலக வளாகம் மற்றும் நகராட்சி கட்டிடஙகளில் கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கும், அதற்குண்டான ரூ.25.00 லட்சம் உத்தேச மதிப்பீடுகளுக்கும் அஙகீகாரத்திற்காக | **2641.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **<u>பொருள் எண்: 38</u>**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 30.01.2017–ம் தேதி ஆய்வுக் கூட்டத்தில் வழஙகப்பட்ட அறிவுரையின்படி இந்நகராட்சி 36 வார்டு பகுதியிலும் தொடர்ந்து நடைபெற்று வரும் டெஙகு மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைப் பணிகளில் தற்காலிக களப்பணியாளர்கள் 100 நபர் ஈடுபட்டு வருகின்றார்கள். இப்பணிக்கு கிருமி நாசினி 2000 கிலோ தேவைப்படுவதால் அதனை அரசு அஙகீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்தில் வாஙகுவதற்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.95,000/–க்கு அஙகீகாரத்திற்காக | **2642.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **<u>பொருள் எண்: 39</u>**<br>இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் எண்.TN69R4954வாகனத்திற்கு 2 டயர்கள் புதியதாக வாஙகுவதற்கு 22.12.2016–ம் தேதியில் உள்ளூர் விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><table><tr><td></td><td></td><td>தொகை ரூ.</td></tr></table> | **2643.** அங்கீகரிக்கப்படுகிறது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>அபிராமி டயர்ஸ், மெயின்ரோடு, கோவில்பட்டி.</td><td>15500/–</td></tr>
<tr><td>2.</td><td>குருடயர்ஸ், மதுரை மெயின்ரோடு சாத்தூர்</td><td>15700/–</td></tr>
<tr><td>3.</td><td>ஆறுமுகம்டயர்ஸ், பஸ்டாண்டுரோடு, சுரண்டை.</td><td>15800/–</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளை குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள அபிராமி டயர்ஸ், கோவில்பட்டி என்பவரது ரூ.15,500/– தொகையினை ஏற்க அங்கீகாரத்திற்காக
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 40</u><br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்டம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டம் நாள்.22.02.2017 வழஙகப்பட்ட அறிவுரையின்படி இந்நகராட்சி 36 வார்டு பகுதியிலும் தொடர்ந்து நடைபெற்று வரும் டெஙகு மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் சிறிய கொசுபுகை தெளிப்பானுக்கு தேவையான கேஸ் சிலிண்டர் 500எண்ணம் அதனை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழக லிமிடெட், திருமுடிவாக்கம் சென்னை நிறுவனத்தில் மூலம் வாஙகுவதற்கும், இதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1.40 இலட்சத்திற்கும் அஙகீகாரத்திற்காக</td>
<td>2644. அங்கீகரிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 41</u><br>கோவில்பட்டி நகராட்சி தினசரி சந்தையின் உட்புறம் அமைந்துள்ள சிறுநீர் கழிப்பிடத்தில் பழுதடைந்து பொதுமக்களும், வியாபாரிகளும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அதை சரி செய்யக்கோரி வர்த்தகர்கள், பொதுநல சஙகஙகளிடமிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளது.<br>பொதுமக்கள் / வியாபாரிகள் நலன் கருதி மேற்சொன்ன கழிப்பிடத்தை பழுது நீக்கம் செய்து மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.50000/–க்கும் பணிகளை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அஙகீகாரத்திற்காக</td>
<td>2645. அங்கீகரிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 42</u><br>இந்நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.14, ஆழ்வார்தெரு சந்து பகுதியில் உள்ள மின்மோட்டார் அறையில் உள்ள தூர்ந்துபோன ஆழ்துளை கிணற்றை அகற்றி அதன் அருகே நீர் ஆதாரம் உள்ள பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைப்பதற்கும் மண்சரிவு உள்ள பகுதியாக உள்ளதால் glohed pipe இறக்குவதற்கும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ.1.45 லட்சத்திற்கும் அஙகீகாரத்திற்காக</td>
<td>2646. அங்கீகரிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 43</u><br>கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான சிதம்பராபுரம் உரக்கிடஙகில் 2015–2016ம் ஆண்டில் திடக்கழிவு மேலாண்மை</td>
<td>2647. அங்கீகரிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது.<br>மேற்சொன்ன திட்டத்தில் கீழ்கண்டவாறு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.<br>1. மூன்றில் ஒரு பங்கு கூரை அமைத்தல்.<br>2. உலர்களம் அமைத்தல்.<br>3. உபகரணங்களை வைப்பதற்கான கூடாரம் அமைத்தல்<br>4. சுற்றுச்சுவர் அமைத்தல்.<br>5. குப்பைகளை உரமாக தயாரிக்கும் உபகரணங்கள் வாங்குதல்<br>6. தார்சாலை அமைத்தல்<br>இதில் வரிசை எண்.5ல் உள்ளபடி உபகரணங்கள் பயன்படுத்தி அன்றாடம் சேகரமாகும் 35மெட்ரிக்டன் குப்பைகள் மற்றும் ஏற்கனவே சேகரம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் (Legacy waste) குப்பைகளையும் நவீன முறையில் பிரித்தெடுத்து 100% குப்பையில்லா நிலையை ஏற்படுத்த தேவையான பராமரித்தல் மற்றும் செயலாக்கம் செய்யும் பணிகளை (O&M) தனியார் மூலம் மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக | |
| | <u>பொருள் எண்: 44</u><br>கோவில்பட்டி நகராட்சி பொதுப்பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.மு.செண்பகவல்லி என்பவர் தனது குடும்ப சூழ்நிலை கருதி திருநெல்வேலி மாநகராட்சியில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு மாறுதலில் செல்ல விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் விண்ணப்பம் அங்கீகாரத்திற்காக<br><u>அ. கு</u>:-<br>கோவில்பட்டி நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் விதவையான திருமதி.மு.செண்பகவல்லி என்பவர் தனது குழந்தைகளையும், விதவை தாயாரையும் பராமரிப்பதற்கு சொந்த ஊருக்கு அருகில் உள்ள திருநெல்வேலி மாநகராட்சிக்கு பணிமாறுதல் கேட்டு விண்ணப்பித்துள்ளார். தனியரின் பணிமாறுதல் விண்ணப்பத்தை அங்கீகாரத்திற்காக | **2648.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | <u>பொருள் எண்: 45</u><br>கோவில்பட்டி நகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடங்கள் மற்றும் இரு சக்கர வாகன காப்பகங்களில் குத்தகை விதிகளின் படி ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வரும் கட்டண விகிதங்களை நகராட்சி நிதி ஆதாரத்தை பெருக்கும் நோக்கில் கீழ்க்காணும் விபரப்படி 01.04.2017 முதல் கட்டண விகிதங்களை திருத்தி அமைக்க அங்கீகாரத்திற்காக | **2649.** அங்கீகரிக்கப்படுகிறது. |

| வ. எண் | அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் | | |
|---|---|---|---|
| | விபரம் | ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு | தற்போது திருத்தி அமைக்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

| | | | |
|---|---|---|---|
| | | வரும் கட்டண விகிதம் | கட்டண விகிதம் |
| 1 | சிறுநீர் கழிப்பிடம் உபயோகபடுத்துதல் நபர் 1க்கு | 1 | 2 |
| 2 | கழிப்பறை உபயோகபடுத்துதல் நபர் 1க்கு | 2 | 5 |
| 3 | குளியலறை உபயோகபடுத்துதல் நபர் 1க்கு | 5 | 10 |

| வ. எண். | அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் இரு சக்கர வாகன காப்பகம் | | |
|---|---|---|---|
| | விபரம் | ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வரும் கட்டண விகிதம் | தற்போது திருத்தி அமைக்கப்பட்ட கட்டண விகிதம் |
| 1 | சைக்கிள் 1க்கு நாள் ஒன்றுக்கு | 1 | 3 |
| 2 | மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் 1க்கு நாள் ஒன்றுக்கு | 2 | 6 |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்: 46**<br>கோவில்பட்டி நகராட்சி 2013–14, 2014–15, 2015–16 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. | **2650.** அங்கீகரிக்கப்படுகிறது. |
| | **பொருள் எண்: 47**<br>நகர்ப்பகுதிகளில் பொதுசுதாதார பராமரிப்பின் அவசியத்தை கருத்தில் கொண்டு மத்தியஅரசு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 (29 of 1986) –ம் வருடம் பிரிவு 3,6 மற்றும் 25 பிரிவுகளின் படி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 இயற்றப்பட்டுள்ளது. 1920-ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் வால்யூம் 5, பிரிவு 306-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ நகராட்சிப் பகுதிகளில் அமல்படுத்திட துணை விதிகள் (BYE LAWS) ஏற்படுத்த நகர்மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. | **2651.** அங்கீகரிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி தனிநபர் குடியிருப்பு மக்கள், வணிக வளாகங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டி சாலை, மருத்துவமனைகள், மொத்த வணிகர்கள், சில்லரை வணிகர்கள் மற்றம் அனைத்து வணிகர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால், கோவில்பட்டி நகராட்சியை "தூய்மையான கோவில்பட்டி நகராட்சி" பகுதியாக்க திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த சிதம்பராபுரம் அருகே நிலஅளவைஎண்.226/பகுதி I(Part I)/226/பகுதி II(Part II)-ல் 16.6 ஏக்கர் பரப்பளவில் திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016-ன் படி திடக்கழிவுகளை மேலாண்மை செய்தல் முறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதன்படி நகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016-ன் அட்டவணை 11 வரிசை எண்.1(3)-ன் படி கழிவை உருவாக்குபவர் அதனை குப்பையாக வெளியே போடுவதை தவிர்க்கும் பொறுப்புடையவராவர் அவர் அதிகார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட சேகரித்தல் மற்றும் பிரித்தல் முறைக்கு இணங்கி கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவர்.<br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153, 156, 157, 158, 159, 160 மற்றும் 161ன் படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணிச்சுற்றுச் சூழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம் வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ சாலைகளில் போடுதல், கழிவுநீர் மற்றும் மழைநீர் கால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடை செய்யப்படுகிறது. மருத்துவமனைகளில் உருவாக்கும் உயிர்க்கழிவுகளை அதற்கென உள்ள நிறுவனங்களிடம் ஒப்படைத்து உயிரி தொழில் நுட்ப முறையில் மட்டும் அழிக்கப்பட வேண்டும். மேற்கண்ட செயல்கள் செய்வோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது.<br>நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும் மழைநீர்கால்வாய் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் விதிகள் 2016-யை கோவில்பட்டி நகராட்சி பகுதிகளில் செயல்படுத்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன் படி துணை விதிகள் ஏற்படுத்திட | |

| | | |
|---|---|---|
| | நகர்மன்றம் ஆணையாளர்க்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின் படி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>1. கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்கள், சந்துக்கள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகங்கள், அலுவலகங்கள், வணிகவளாகங்கள் இன்ன பிற இடங்களில் வசிக்கும் மக்கள் திடக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரங்களிலோ, சந்துக்களிலோ, கழிவு நீர்க்கால்வாய்களிலோ, பொது இடங்களிலோ மற்றும் நீர்நிலைகளிலோ போடக்கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.<br>2. மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடங்களில் உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவற்றினை தனியாகவும் மக்காத தன்மை உள்ளவற்றினை தனியாகவும் சேகராம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சை நிறக் கூடையிலும் , மக்காத தன்மையுள்ள குப்பைகளை சிவப்பு நிறமுள்ள கூடையிலும் சேகரம் செய்யப்பட வேண்டும். இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாங்கி உபபோகிகப்பட்ட வேண்டும்.<br>3. இவ்வாறு தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்ட குப்பைகளை நகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளும். தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த குப்பைகளை வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைப்பது வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத குப்பைகளை கண்டிப்பாக வாங்கப்பட மாட்டாது.<br>4. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்பகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனங்களது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் நகராட்சியின் வாகனம் வரும்போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். நகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து குப்பை பெற்றுக் கொள்ளப்படமாட்டாது,<br>5. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் கழிவுகளை தெருக்களிலோ அல்லது | |

| | | |
|---|---|---|
| | திறந்த வெளியிடங்களிலோ அல்லது கழிவு நீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலங்களாக்கி நகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக் கூடாது.<br>6. மருத்துவமனை கழிவுகள், நோய் கிருமி சோதனை செய்யும் கூடங்கள் மற்றும் கால்நடை மருந்து கழிவுகளை எக்காரணம் கொண்டும் குப்பைகளில் சேர்க்க கூடாது. இந்திய அரசின் 1999 ஆம் ஆண்டின் மருத்துவ கழிவுநீர் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகளில் கூறியவாறு மருத்துவமனை மற்றும் சோதனைச் சாலை பொறுப்பில் உரியவாறு அகற்றி அழித்தல் வேண்டும். மருத்துவமனை கழிவுகளை நகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.<br>7. தோட்டக்கழிவுகள், பால்பண்ணை கழிவு ஆகியவற்றை உருவாக்குவோர் உரிமையாளர் அவற்றை தம் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்த வேண்டும். நகராட்சி சாலை ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.<br>8. கட்டிட இடிபாடுகள் கட்டிட உரிமையாளர் அல்லது ஒப்பந்தக்காரர்கள் சாலைகளிலோ, தெருக்களிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவைகளை சம்மபந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய நிர்வாகக் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவைகளை அப்புறப்படுத்தும்.<br>9. நகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர் டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனை குற்றமாகும்.<br>10. திருமண மண்டபங்கள், கோவில், சர்ச், மசூதிகள், சத்திரம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின் போது உருவாகும் கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ, கழிவு நீர் வாய்க்கால்களிலோ அல்லது வேறு எந்த பகுதிகளிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவற்றை தமது வாகனம் மூலம் நகராட்சி உரக்கிடங்கில் ஒப்படைக்க வேணடும். இதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக கட்டணம் பெறப்படும்.<br>11. உணவு விடுதிகள், தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப் பொருள் விற்பனை | |

நிலையங்கள், இரவு நேர கடைகள், காய்கறி மொத்த வியாபார நிலையம் மார்க்கெட் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை தெருக்களிலோ சாலைகளிலோ அல்லது நகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். உரிய நிர்வாகக் கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக்கொள்ளும்.

12. அச்சகங்கள், தொழிற்சாலைகள், ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் குப்பை கழிவுகளை நகராட்சி எல்லைக்குள் கொட்டக்கூடாது.
13. தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளை நகராட்சி பகுதியில் விடக்கூடாது கழிவுகளை அப்புறப்படுத்த மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி அப்புறப்படுத்த வேண்டும்.
14. பாதசாரிகள் மற்றும் சாலை ஓரங்களிலும் இதர இடங்களிலும் குடியிருப்போர் நகராட்சி சாலை ஓரங்களில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தில் கூடாது.
15. செப்டிக் டேங்க் கழிவுகளை, கழிவுநீர் வாய்க்கால்களிலோ, அல்லது தெருக்களிலோ கொட்டக்கூடாது. அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

16. 5000 சதுர மீட்டருக்கு அதிகமான பரப்பளவு உள்ள இடங்களில் சேகரமாகும் குப்பைகளை தாங்களே தங்கள் வளாகத்திற்குள் மக்கச் செய்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிளாஸ்டிக் மற்றும் உடல் நலத்திற்கு தீமைபயக்கும் கழிவுகளை மட்டும் நகராட்சி துப்புரவு பணியாளர்களிடம் ஒப்படைப்பு செய்ய வேண்டும். அதற்கான உபயோகிப்பவர் கட்டணத்தினை துணை விதிகள் கூறியுள்ளபடி நகராட்சிக்கு செலுத்தியபின் நகராட்சி மூலம் அகற்றப்படும்.
17. சுகாதாரக்கழிவுகளான டயப்பர், நாப்கின்கள் ஆகியவற்றினை உற்பத்தியாளர்களால் அதனுடன் வழங்கப்படுகினற உறையினுள்ளோ அல்லது பொருத்தமான பொருளால் சுற்றியோ மட்டுமே வழங்கப்படவேண்டும்.

18. நகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை நீக்கம் செய்வதற்கான நிர்வாக கட்டணங்களை பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

## அட்டவணை I – (USER CHARGES)

| வ.எண் | பொருள் | காலம் | கட்டண ரூபாய |
|---|---|---|---|
| 1.குடியிருப்பு (Hapitation) | | | |
| I. | தனிநபர் குடியிருப்பு (அரையாண்டு சொத்துவரி ரூ.500-க்குள்) | மாதம் | 10.00 |
| II. | தனிநபர் குடியிருப்பு (அரையாண்டு சொத்துவரி ரூ.501 – 1000க்குள்) | மாதம் | 20.00 |
| III. | தனிநபர் குடியிருப்பு (அரையாண்டு சொத்துவரி ரூ.1001 –2000க்குள்) | மாதம் | 40.00 |
| IV. | தனிநபர் குடியிருப்பு (அரையாண்டு சொத்துவரி ரூ.2001க்கு மேல்) | மாதம் | 80.00 |
| **2. நிறுவனம்** (Institution) | | | |
| I. | தனியார் பள்ளி, கல்லூரி விடுதி / தனியார் அலுவலக வளாகம் | மாதம் | 500.00 |
| II. | மருத்துவமனை (படுக்கை வசதியுடன்) | மாதம் | 500.00 |
| III. | கிளினிக் | மாதம் | 100.00 |
| 3. வணிகம் (Commercial) | | | |
| A. | டீ ஸ்டால் / சிற்றுண்டி(நொறுக்கு தீனி கடை) | மாதம் | 60.00 |
| B. | நடமாடும் உணவகம் | தினமும் | 10.00 |
| C. | உணவகம் சிறியது | மாதம் | 200.00 |
| D. | உணவகம் பெரியது | மாதம் | 400.00 |
| E. | வணிக வளாகம்<br>(I) Departmental Store<br>(II) Provisional Store | மாதம் | 300.00 |
| F. | திருமண மண்டபம் (I)சிறியது(II)பெரியது | நிகழ்வு ஒன்றுக்கு | 250.00<br>500.00 |
| G. | தையல் கடை | மாதம் | 50.00 |
| H. | இருசக்கர வாகன பழுது நீக்கும் கடை | மாதம் | 30.00 |
| I. | மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் கடை | மாதம் | 100.00 |
| J. | தேங்காய் / பூ / பழம் / காய்கறிகள் வியாபாரம் | மாதம் | 100.00 |

| | | | |
|---|---|---|---|
| K. | பலசரக்கு / ஸ்டேஷ்னரி / மருந்தகம் | மாதம் | 100.00 |
| L. | மட்டன் / சிக்கன்/ மீன் ஸ்டால் | மாதம் | 100.00 |
| M. | சினிமா தியேட்டர் | மாதம் | 500.00 |
| N. | ஜவுளி கடை வியாபாரம்<br>(I) சிறியது<br>(II) பெரியது | மாதம் | 100.00<br>200.00 |
| O. | தோல் பை விற்பனை, தயார் செய்தல், காலணி விற்பனை | மாதம் | 50.00 |
| P. | மேற்கூறியவை அல்லாத ஏனைய இணங்கள் | மாதம் | 100.00 |
| 4. மற்றவை | | | |
| I. | மரக்கழிவுகள் | நிகழ்வு 1க்கு | 200.00 |
| II. | வீட்டுத் தோட்டக்கழிவுகள் | நிகழ்வு 1க்கு | 50.00 |
| III. | கட்டுமான / கட்டிட கழிவுகள் லாரி ஒன்றுக்கு | | 500.00 |
| IV. | 5000 ச.மீ அதிகமான பரப்பளவு உள்ள இடங்கள் (நச்சு மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள்) | மாதம் ஒன்றுக்கு | 500.00 |

## அட்டவணை – II

## மக்கும் கழிவுகள் மற்றும் கறுசுழற்சி கழிவுகள் விளக்கப்பட்டியல்

| உயிரி மக்கும் கழிவு | மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு |
|---|---|
| மக்கும் கழிவு என்பதன் பொருள் பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படும் கழிவாகும். இதை ஈரக்கழிவு எனவும் அழைக்கப்படுகிறது.<br>மக்கும் கழிவு முழுமையாக தாவரம் அல்லது விலங்கு மூலங்களிலிருந்து உருவாகும் ஒரு வகை கழிவாகும். | மறு சுழற்சி செய்யத்தக்க கழிவு என்பது பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படுவதாகும்.இது உலர் கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. இதை ஒரு செயல் முறையில் புதிய பொருட்கள் உருவாக்குவதற்கு வேண்டிய மூலப் பொருட்களாக மாற்ற முடியும். புதிய மூலப் பொருட்கள் பழைய பொருட்கள் போல் இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். |

| | |
|---|---|
| • டீ இலைகள், முட்டை ஓடுகள், பழும், காய்கறித் தோல்கள் மற்றும் பயன்படாதென விடுபவை உள்ளிட்ட சமையலறைக் கழிவுகள்<br>• இறைச்சி மற்றும் எலும்புகள்<br>• மலர்கள் உட்பட தோட்டக்குப்பை மற்றும் இலைக்குப்பை<br>• விலங்கு குப்பை<br>• பழுதடைந்த காகிதம்<br>• தேங்காய் ஓடு<br>• சாம்பல் | • செய்திதாள்கள்<br>• தாள், புத்தகம் மற்றும் இதழ்கள்<br>• கண்ணாடி<br>• உலோகப்பொருட்கள், கம்பி<br>• நெகிழி (Plastic)<br>• கந்தல் துணி<br>• தோல்<br>• ரெக்சின்(Motion)<br>• தொய்வை(Rubber)<br>• மரம் / அறைகலன்<br>• மூட்டை கட்டல் |

**அட்டவணை III**

**வீட்டு அபாயகரமான கழிவு பட்டியல்**

❖ ஏரோசல் டப்பா (Aerosol cans)

❖ மின்வெட்டொளி விளக்கின் மின்கலப்பெட்டியும் பட்டன் செல்லும்.

❖ நிறம் நீக்கி மற்றும் வீட்டு சமையலறையும், வடிகாலையும் சூய்மை செய்யும் பொருட்கள் இவற்றின் கொள்கலன்கள்.

❖ சீருந்து மின்கலப்பெட்டிகள், எண்ணெய் வடிகட்டிகள் மற்றும் சீருந்து பராமரிப்பு பொருட்கள் மற்றும் நுகர் பொருட்கள், வேதிய பொருட்கள் மற்றும் கரைப்பான்கள் இவற்றின் கொள்கலன்கள்.

❖ ஒப்பனைப் பொருட்கள் இரசாயன அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.

❖ ஒளி விளக்குகள், குழாய் விளக்குகள் மற்றும்

| | | | |
|---|---|---|---|
| | அடர்த்தியான ஒளி விளக்குகளை வேண்டாமென்று விலக்கிய மருந்துகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.<br>❖ வண்ணப்பூச்சு, எண்ணெய்கள், உய்வுப் பொருட்கள் (Lubricants), வஜ்ரபசைகள, நீர்மமாக்கிகள்(Thinners) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.<br>❖ பூச்சிக்கொல்லிகள் மற்றும் கலைக் கொல்லிகள் அவற்றின் வெற்று கொள்கலன்கள்.<br>❖ புகைப்பட ஆடியோ / வீடியோ நாடாக்கள் (Tabers) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்<br>❖ இராசாயனப் பொருட்கள் மெத்து (Styrofoam) மற்றும் அறைகலன்களை சிப்பம் கூட்டு மென்னையான மெத்துகள்.<br><br>❖ மூட்டை கட்டும் கருவிகள், வெப்பமானிகள் மற்றம் பாதரசம் கொண்டப் பொருட்கள் தனியார் கணிணிகள், தொலைபேசிகள், எம்பி3 இயக்கிகள், ஆடியோ சாதனங்கள், தொலைகாட்சி பெட்டிகள், கணிப்புப்பொறி, ஜி.பி.எஸ்(G.P.S.) தானியங்கி மின்னனு, டிஜிட்டல் படி பெட்டிகள் தானாக இயக்கும் கருவிகளும் மற்றும் டி.வி.டி (DVD)கள், வி.சி.ஆர்.(VCR) அல்லது கேம்கோடா போன்ற வீடியோ ஊடகத்தைப்பயன்படுத்தி ஒளி இயக்கும் கருவிகள் மறு பதிப்பான்கள் முதலிய மின்கழிவுகள்.<br>19. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1999 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சுழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு-15-ன் படி, கோவில்பட்டி | |

நகராட்சி சுற்றுச் சூழலுக்கு எதிரானதாக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.

20. துணைவிதிகளில் குறிப்பிட்டுள்ள செய்யக் கூடாத செயலை செய்யும் நபருக்கு அட்டவணை IV-ல் குறிக்கப்பட்டுள்ளவாறு அபராத கட்டணம் விதிக்கப்படும்.

## உப விதிகளை மீறுபவர்களுக்கு விதிக்கப்படும் அபராதக் கட்டணங்கள்

| வ. எண். | உபவிதிகளின் வகையினம் | அபராதக் கட்டணம் (ஒரு தடவைக்கு) |
|---|---|---|
| 1. | பொது இடங்களில் குப்பைகளை வீசி எறிதல் | 500.00 |
| 2. | குப்பைகளை தரம் பிரித்து வழங்காதவர்களுக்கு | |
| | i) தனிநபர் குடியிருப்பு | 200.00 |
| | ii) குடியிருப்புகளின் தொகுதி | 300.00 |
| | iii) அதிக குப்பைகள் உற்பத்தியாளர்கள் | 500.00 |
| | iv) விற்பனையாளர்கள், கூவி விற்பனை செய்பவர்கள் | 750.00 |
| 3. | கட்டுமானம் மற்றும் கட்டிடக் கழிவுகளை நகராட்சி, பொது இடங்களில் கொட்டுதல | 5000.00 |
| 4. | கட்டுமானம் மற்றும் கட்டிடக் கழிவுகள் நகராட்சி, பொது இடங்களில் குப்பைகளுடன் கொட்டுதல | 5000.00 |
| 5. | தோட்டம் மற்றும் மரம் வெட்டிய கிளைகளை கொட்டுதல் | 500.00 |
| 6. | நகராட்சி குப்பைகள் சேகரிக்கும் தொட்டிகளை தவிர ஏனைய இடங்களில் குப்பைகளை சேகரித்து வைத்தல் | 1000.00 |
| 7. | குப்பைகளை தீ வைத்து எரித்தல் | |

| | | |
|---|---|---|
| | (A) தனிநபர் வீட்டிற்குள்<br>(B) தனிநபர் பொது இடங்களில்<br>(C) நிலையங்கள் / வளாகங்கள் | 200.00<br>500.00<br>1000.00 |
| 8. | மீன்/கோழி/ஆடு ஆகியவற்றின் இறைச்சி கழிவுகளை நீர்க்கசிவு ஏற்படாத கொள்கலனில் வழங்கத் தவறியவர்களுக்கு | 2000.00 |
| 9. | வியாபார நிறுவனங்களில் குப்பைகள் போடுவதற்கு பிரத்யேக குப்பைத் தொட்டி வைக்காதவர்களுக்கு | 500.00 |
| 10. | பொது இடங்களில் பொது மக்கள் கூடும் நிகழ்ச்சிகள் (24 மணி நேரத்திற்குள் சுத்தம் செய்யப்படாதது) | 10000.00 |
| 11. | 5000 ச.மீ. பரப்பளவுக்கு மேல் உள்ள இடங்களில் தரம் பிரிக்காமல் திடக் கழிவுகளை வழங்குதல் | 5000.00 |

21.மேற்காணும் தொடர் குற்றங்களுக்கு தினசரி ரூ.100 —வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

22.மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள, நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிக்கு நகராட்சியின் ஆணையாளருக்கு நகராட்சி மன்றத்தினரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி மேற்கண்ட விபரப்படி துணைவிதிகள் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக

அ.கு:-

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ இந்நகர் பகுதிகளில் அமுல்படுத்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-306-ன் படி நகர்மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி துணைவிதிகள் ஏற்படுத்த ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.688/2017/எச்1

<table>
<tr>
<td></td>
<td>

<u>**பொருள் எண்: 48**</u>

குடிநீர் நிதி 2016–17ன் கீழ் ரூ.12.85லட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி 1முதல்36 வரையிலான வார்டுகளில் உள்ள அடிபம்புகளை பராமரிப்பு பணி செய்வதற்கு தேவையான உதிரி சாமான்களை, மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் 27.02.2015ம் தேதிய PA8/3288/2014 ன்படி அனுமதி வழஙகியுள்ள நிறுவனமான M/S Flowin Industries, Erode என்ற நிறுவனத்தில் கீழ்க்கண்ட அடிபம்பு உதிரி சாமான்களை வாஙகி கொள்ளவும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ.12.85 லட்சத்திற்கும் மன்றத்தின் அஙகீகாரத்திற்காக.

<table>
<tr><td>Sl.No.</td><td>Items</td><td>Quantity</td></tr>
<tr><td>1.</td><td>1 ¼” GI Pipe with socket</td><td>500</td></tr>
<tr><td>2.</td><td>½” Connecting rod</td><td>500</td></tr>
<tr><td>3.</td><td>1 ¼” GI coupling</td><td>290</td></tr>
<tr><td>4.</td><td>2 ½” Cylinder body</td><td>200</td></tr>
<tr><td>5.</td><td>Lower valve assembly</td><td>100</td></tr>
<tr><td>6.</td><td>Upper valve assembly</td><td>200</td></tr>
<tr><td>7.</td><td>bolt & nuts unit</td><td>1000.00</td></tr>
<tr><td>8.</td><td>handle axile (Soft)</td><td>200.00</td></tr>
<tr><td>9.</td><td>Chain with coupling</td><td>200.00</td></tr>
<tr><td>10.</td><td>ball bearing</td><td>200.00</td></tr>
<tr><td>11.</td><td>½” rod coupling</td><td>1000.00</td></tr>
<tr><td>12.</td><td>Water tank</td><td>20.00</td></tr>
<tr><td>13.</td><td>Telescopic stand for mark-II Pump</td><td>20.00</td></tr>
<tr><td>14.</td><td>Plunzer rod</td><td>100.00</td></tr>
<tr><td>15.</td><td>head with handle assembly</td><td>20.00</td></tr>
<tr><td>16.</td><td>pump bucket 2 ½” cup washer</td><td>1000.00</td></tr>
<tr><td>17.</td><td>Check valve scat</td><td>200.00</td></tr>
</table>

</td>
<td>**2652.** அங்கீகரிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>

<u>**பொருள் எண்: 49**</u>

கோவில்பட்டி நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் டம்பர் பிளேசர் TN69R 8/04–ல் ஏற்பட்டுள்ள கீழ்கண்ட பழுதுகளை நிவர்த்தி செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.55,000/–க்கும் மன்றத்தின் அஙகீகாரத்திற்காக.

1. 4 வீல் கிரீஸ் பேக்கிங
2. 4 வில் பிரேக் ஷீ, பூஸ்டர், E2 வால்வு ஷேண்ட் பிரேக், ஏர் டியூப் புதியது மாற்றம்
3. வாட்டர் பம்ப் புதியது, ரேடியேட்டர் வோஸ்புதியது மாற்றம்
4. பிளாட்பார்ம், மட்காடு சரிசெய்தல்
5. செல்ப்ஸ் டாட்டர் ஓவராய்லிஙக்
6. வாட்டர் சர்வீஸ், கம்ளிப் பெயிண்டிங, ஸ்டிக்கர், லெட்டர்ஸ்
7. வைப்பர் பிளேடு, கம்னிட் எலக்ட்ரிக்கல் செக்கப்
8. ஆயில்சர்வீஸ், டீசல் பில்டர், ஆயில் பில்டர், கியர்பாக்ஸ் ஆயில், கிரௌன் ஆயில் மாறுதல்.

</td>
<td>**2653.** அங்கீகரிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அ.கு:-<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. பொது சுகாதார பணி நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கைகள் மேற்கண்ட வகைக்கு மன்றம் அனுமதி வழஙகலாம். | |

**(ஒம்) ரா.முருகேசன்**
**தனி அலுவலர்**
**கோவில்பட்டி நகராட்சி**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**கோவில்பட்டி நகராட்சி**